# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 4 | டிசம்பர் 1991 | இதழ் 12





வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

விவிலியம் ஓர் கண்ணோட்டம் என்ற தலைப்பில் 1992 ம் ஆண்டு காலண்டர் தயார் விலை ரூ. 5.

கிடைக்கும் இடங்கள் :

1. E A. **ஆறுமுகம்**
54, ராம்நகர்,
திண்டுக்கல் - 624004.

2. S. **ஹென்றி மோகன்**
பிரகாசபுரம், கேத்தி P.O.
நீலகிரி மாமட்டம்.

3. R. **எஸ்றா**
35, லாக் தெரு,
கோட்டூர்,
சென்னை - 600085.

4. Mrs. **தீபா நாகராஜன்**
காலேஜ் ஆப் நர்ஸிங்
C. M. C. ஆஸ்பத்திரி
வேலூர் - 632004

5. S. **ஏசையின்** M. Com.
ரூம், நெ 2, கணேஷ் பில்டிங்ஸ்
கிராஸ் கட் ரோடு, காந்திபுரம்
கோவை.

6. E. Z. செல்வநாயகம்
2, மணல்மேடு வீதி,
ஈரோடு - 638002.

இவ்விடத்தில் 100 பாடல் கொண்ட பாடல் புத்தகங்களும் கிடைக்கும் விலை ரூ. 3 (தபால்செலவு உட்பட)

# தலைப்புச் செய்திகள்


1. நல்லவர்கள் துன்பப்படுவதை தேவன் ஏன் அனுமதிக்கிறார்? 1-8
2. என் நிலை சரியானது தான் என்று நான் எப்படி அறிந்து கொள்வது 9-13
3. நல்ல தாயார் 14-17
4. வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சியை பலர் இழந்துகொண்டிருக்கின்றனர் 18-20
5. நான் ஏன் பிறந்தேன் 21-26
6. ''வாய்மையே வெல்லும்'' 27-28

# THIRUMARAI AASAAN

**Editor**
**E.Z. SELVANAYAGAM**

**Honorary Editor**
**J.C. CHOATE**

✻ ✻ ✻

**Published by Church of Christ**
**2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol 4. December—1991 Issue 12**


**ஆசிரியவுரை**

# நல்லவர்கள் துன்பப்படுவதை தேவன் ஏன் அனுமதிக்கிறார்?

சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த யோபு "என்னைக் குற்றவாளியென்று தீர்க்காதிரும். நீர் எதினிமித்தம் என்னோடே வழக்காடுகிறீர், அதை எனக்குத் தெரியப்படுத்தும்

நீர் என்னை ஒடுக்கி உம்முடைய கைகளின் கிரியையை வெறுத்து, துன்மார்க்கனின் யோசனையைக் கிருபையாய்ப் பார்க்கிறது உமக்கு நன்றாயிருக்குமோ" என்த கர்த்தரை நோக்கி முறையிடுகிறார். (யோபு 10:2,3)

அதே விதமான மனக்குழப்பத்தோடு இன்றைக்கும் கோடிக் கணக்கான மக்கள் தேவனுடைய செயல்பாடுகளைக் குறித்து விளங்கிக் கொள்ள முடியாமல் "கர்த்தர் என்னை வெறுக்கிறாரா? அதனால்தான் நான் இப்படி வேதனையில் உழல்கிறேனா? பல விதமான பாவங்களைக் கூசாமல் செய்கிற எத்தனையோ பேர் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் போது எனக்கு மட்டும் ஏன் இந்த வேதனை?" என்று கேட்டு மறுகுகின்றனர்.

பட்டயத்தை எடுக்கிறவன் பட்டயத்தால் சாகிறான்; ஒரு குடிகார ஓட்டுநர் பயங்கர விபத்துக்குள்ளாகிறான். சதா சிகரெட்டும் கையுமாக அலைகிறவன் காச நோயால் பீடிக்கப்படுகிறான் அதில் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால் ஒரு பாவமும் அறியாத

அப்பாவி மக்கள் வெடி குண்டுகளுக்கு இரையாவதும் பள்ளி செல்லும் சிறார்கள் விபத்துக்குள்ளாகி மடிவதும் பால் மணம் மாறாத பச்சிளங் குழந்தைகள் பலவித கொடிய நோய்களால் பீடிக்கப்படுவதும் ஏன்?

கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா? அவர் அன்பும், இரக்கமும் கருணையும் உள்ளவர் என்றால் ஏன் இவ்வளவு துன்பங்களை அவர் படைத்த உலகத்தில் அனுமதித்துக் கொண்டிருக்கிறார்? ஒரு வேளை உலகத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் சக்தியை இழந்து விட்டாரா? கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்றால், ஏன் இப்படி நல்லவர்கள் துன்பப்படுவதையும் துன்மார்க்கர்கள் செழித்து வாழுவதையும் அனுமதிக்கிறார்? இது போன்ற கேள்விகளுக்கு விடை தெரியாத காரணத்தால் ஒரு சிலர் கடவுளே இல்லை என்று சொல்லும் அளவுக்குப் போய் விடுகிறார்கள். ஏனெனில் கடவுள் ஒருவர் இருந்தால் இவ்வளவு கொடுமைகளைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார் என்று மனம் வெதும்பி விரக்தியடைந்து குறைப்பட்டுக் கொள்கின்றனர். வேறு சிலர் கடவுள் இருக்கலாம், ஆனால் அவரைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் அவரை நினைத்துப் பார்த்துப் பெருமைப்படும் அளவுக்கு அவர் நல்லவரும் வல்லவரும் அல்லர் என்று நினைக்கின்றனர். இன்னும் சிலர் பாவம், கர்த்தர் என்னமோ நல்லவர் தான், ஆனால் நாளுக்கு நாள் பாவத்தில் திளைத்து. கலகம் செய்கிற மக்களோடு எத்தனை நாளுக்குத் தான் போராடுவார்? எப்படியோ தொலைந்து போகட்டும் என்று கண்டு கொள்ளாமல் இருக்கிறார் என்கின்றனர். ஆனால் சிலபேர் எல்லாம் வல்ல இறைவன் அன்பும் அருளும் நிறைந்தவர், ஞானமுள்ளவர் எல்லாவற்றையும் ஒரு நோக்கத்துக்காகத் தான் செய்கிறார் என்று நம்புகின்றனர்.

இப்படி கோடிக்கணக்கான மக்கள் தங்களுக்குத் தோன்றுகிறபடியெல்லாம் இறைவனின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்கிற வேளையில், நான் மட்டும் எனக்கு எல்லாம் தெரியும். கடவுள் என்னோடே பேசி அதன் சரியான காரணங்களை இரகசியமாக எனக்கு வெளிப்படுத்தினார் என்று கூறிப் பெருமையடித்துக் கொள்ள நான் விரும்பவில்லை. அல்லது இவைகளையெல்லாம் நமக்குத் தெளிவுபடுத்தித்தான் ஆகவேண்டும் என்று கோருவதும் எதிர்பார்ப்பதும் நியாயமல்ல.'' ஆகையால் நான் எனக்குத் தெரியாதவைகளையும், என் புத்திக்கு எட்டாததையும் நான் அறியாததையும் அலப்பினேன் என்று தான் தேவனுடைய செயல்பாடுகளுக்கான காரணங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்று முயன்று தோற்றுப்போன யோபு சொல்லுகிறதைக் கவனியுங்கள் (யோபு 42:3)

ஆயினும் நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை தேவன் தமது அனந்த ஞானத்தால் மனுக்குலத்துக்குத் தந்தருளியிருக்கிற பரிசுத்த வேதாகமத்தில் நம்முடைய பிரச்னைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாகத் தீர்வுகள் சொல்லப்படாவிட்டாலும், பொதுவாக மனுக்குலத்துக்கு ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வுகள் சொல்லப்பட்டுத் தான் இருக்கின்றன. தேடி வாசித்து ஆறுதலடைவோம் வாருங்கள்.

**உலக நடைமுறையில் கோளாறுகள் :**

''இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார். அவர்களோ அநேக உபாய தந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்'' என்று கூறுகிறார், ஞானி சாலமோன் (பிர 7:29) தேவனால் செம்மையாகப் படைக்கப்பட்ட உலகத்தை தன் கெடுமதியால் சீர்குலைத்து போட்டான். நாட்டு நடப்புகளைக் கவனித்துப் பார்த்தால் துன்பங்களும், வேதனைகளும் அனைத்து மக்களையும் அகில உலகத்தையும் கவ்விக் கொண்டிருக்கிறதைக் காணமுடியும், நல்லவர்களுக்குத் திண்டாட்டம், துன்மார்க்கர்களுக்குக் கொண்டாட்டம்.

அப்படியானால் மனிதர்கள் உலக நடப்புகளில் தலையிட்டுக் கெடுத்துப் போடாதபடி படைத்திருக்கக் கூடாதா? அல்லது கெட்டது செய்யும் ஆற்றல் அற்றவர்களாக மனிதனைப் படைத்திருக்கக் கூடாதா? என்று கேட்கத் தோன்றுகிறது. படைப்பின் சிகரமாகிய மனிதனுக்கு தேவன் கொடுத்திருக்கிற' தேர்வு செய்யும் உரிமம் மிகப் பெரிய ஆசீர்வாதம். அதை அவன் பயன்படுத்துவதில் கவனமாயிரா விட்டால் சில தவறான முடிவுகள் தவிர்க்க முடியாததாகி விடுகின்றன. அதைக் காரணம் காட்டி அந்த உரிமையை மறுப்போமானால் அதற்கு உரிமம் என்ற பெயர் பொருந்தாது.

எடுத்துக்காட்டாக, ஓட்டுரிமையை எடுத்துக் கொள்வோம். ஒருவன் தன் மனதுக்குப் பிடித்த ஒரு கட்சிக்கோ அல்லது தனி நபருக்கோ தன் வாக்கை அளிக்கலாம் என்று அரசியல் அமைப்பு உரிமம்' கொடுத்திருக்கிறது. அதற்கு மாறாக அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கோ, மனிதனுக்கோ தான் ஓட்டளிக்க வேண்டும் என்று தாக்கீது பிறப்பித்தால் அது அரசியல் சாசனம் கொடுத்த குடியுரிமையைப் பறிப்பது ஆகும் அல்லவா? அதே போன்று, தேர்வு செய்யும் உரிமத்தை தேவன் மனிதனுக்குக் கொடுத்து விட்டு, அவன் செயல்பாட்டைக் கட்டுப்படுத்தமுயல்வது முறையாகாது, அப்படிச் செய்தால் அவன் ஒரு மனித இயந்திரமாகவோ அல்லது

சாவி கொடுத்த பொம்மையாகவோ தான் இருப்பான். சுதந்தரமாய் செயல்பட முடியாது.

இவ்வுண்மையை சாத்தான் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தேவன் முதன் முதலில் படைத்த, ஆதாமையும் ஏவாளையும் வஞ்சித்து தேவனுக்குப் பிரியமில்லாத காரியத்தைச் செய்து, அவருடைய கட்டளையை மீறினார்கள். அதைத் தான் வேதாகமம் பாவம் என்று கூறுகிறது. எப்படி ''எய்ட்ஸ்'' என்னும் கொடிய நோய் சரீரத்தைச் சடுதியாய்த் தாக்கி, விரைவில் மரணமடையச் செய்கிறதோ அதை விடக் கடுமையாய் பாவம் ஆன்மாவை பாதிக்கச் செய்து பல கேடுகளை உண்டாக்கி விட்டது (ரோமர் 1:18-32;5:12)

பாவம் உலகத்துக்குள் பிரவேசித்து மனிதனுடைய சுபாவத்தைக் களங்கப் படுத்தியதோடு நில்லாமல் தேவ கோபம் பல வழிகளிலும் வெளிப்படக் காரணமாயிற்று. மனிதனுக்கு ஆவிக்குரிய, சரீர மரணம் சம்பவிக்கச் செய்தது (ஆதி 3:9) குழந்தை பேறு பயங்கர வேதனையுடன் நடைபெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது (ஆதி 3;16) பூமி சபிக்கப்பட்டு முள்ளும் குறுக்கும் முளைத்து மனிதன் பாடுகளுடன் வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியத்தை உண்டாக்கியது. (ஆதி 3:17-19) ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் தேவனோடு கொண்டிருந்த நல்லுறவு துண்டிக்கப்பட்டது (ஆதி 3: 23,24)

இந்த அவல நிலையை அப்போஸ்தலனாகிய பவுல் ''ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வசிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது'' என்று அங்கலாய்க்கிறார். (ரோமர் 8:22). இவைகளிலிருந்து நாம் தெரிந்து கொள்கிற உண்மை என்னவெனில், இன்றைய உலகம் தேவன் படைத்த பொழுது இருந்த மாதிரி இல்லை என்றும் இன்று உலகில் பெருகி வரும் பிரச்னைகளுக்கு பாவமே முதல் காரணம் என்றும் துணிந்து கூறலாம்.

இதற்கு விமோசனமே இல்லையா? உண்டு. கருணை நிறைந்த தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை இந்த உலகத்துக்கு அனுப்பி மனுக்குலத்தை அழிவிலிருந்து மீட்டுக் கொள்ள வகை செய்திருக்கிறார் (யோவான் 3:16) அவரை விசுவாசித்து ஏற்றுக் கொண்டு அவருடைய உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டால் இம்மையிலும் மறுமையிலும் சமாதானமும், மகிழ்ச்சியுமுள்ள வாழ்க்கை வாழலாம்.

*மாராவின் கசப்பான தண்ணீரை மதுரமாக்கிய தேவன் பிசாசின் வஞ்சகத்தால் சீரழிவுக்குள்ளான உலகத்தில் வாழ்கிற மக்கள் அவருடைய ஆலோசனையைக் கேட்டு நடந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து, இவ்வுலகத்தின் கேடுபாடுகளுக்குத் தப்பித்துக் கொள்ளும் மார்க்கத்தை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார் (1 கொரி 10:13) மேலும் நமக்கு வருகிற சோதனைகளை மாற்றி அவைகளை நமக்கு நன்மைக் கேதுவாக மாற்றி போடுகிறார். (ரோமர் 8:28)*

**சில சோதனைகளும் துன்பங்களும் நம்மை உஷார்ப்படுத்தி நமக்கு வரும் பெரும் அபாயங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள நம்மை ஏவுகிறது.**

*எடுத்துக்காட்டாக, நமக்கு ஏற்படுகிற சில சரீர உபாதைகளை நம்முடைய சரீர உறுப்புகளில் ஏதோ ஒன்றோ, சிலதோ பழுதடைந்து கொண்டு வருகிறது அதைக் கவனி என்று எச்சரிக்கிறது. அதைப் புரிந்து கொண்டு வைத்தியம் செய்து கொண்டால், அவைகளைச் சீர் செய்து கொண்டு ஆரோக்கியமாக வாழலாம்.*

**II சில சோதனைகள் நமக்கு பொருமை என்னும் நற்குணத்தைப் பெற்றுக்கொள்ள உதவி செய்கிறது.** *(எபி 10:36) "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோசமாய் எண்ணுங்கள்" என்கிறார் யாக்கோபு (யாக் 1:2,3) சோதனைகள் கொஞ்ச காலப் பாடுகள் தான் என்றும், அவைகள் உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலை நிறுத்துவதற்கு அவசியம் என்கிறார் பேதுரு (1 பேதுரு 5:10)*

**III மனுக்குலத்தைக் குறித்து எப்பொழுதும் பிராது செய்வதே தொழிலாகக் கொண்டிருக்கிற சாத்தானின் வாயை அடைப்பதற்கு, தேவன் சிலவேளைகளில் நமக்குச் சோதனையை கொடுக்கிறார்.** எடுத்துக்காட்டாக யோபுவின் வறலாற்றைக் கவனியுங்கள். யோபு உம்மை விருதாவாக சேவிக்கவில்லை. அவனுக்கு நீர் வசதியான வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறீர் அவைகளை நீர் பிடுங்கிக் கொண்டால் அவன் உம்மை சேவிக்க மாட்டான். மாறாக சபிப்பான் என்று சவால் விடுகிறான் சாத்தான். (யோபு 1:9-12) அதை மறுக்கும் வகையில் யோபுவை சோதித்துக் கொள்ளும்படி அனுமதி வழங்குகிறார் தேவன் (யோபு 2:3-7) ஆனால் யோபு சாத்தான் எதிர்பார்த்ததற்கு மாறாக "தேவன் கையிலே நன்மையை பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ" என்று கூறி துன்பங்களைப் பொறுமையோடே

சகித்ததின் மூலம் பிசாசின் வாய் அடைக்கப்பட்டது. அவருக்கும் இரட்டிப்பான ஆசீர்வாதங்கள் கிடைத்தன. (யோபு 42:12) யாக் 1:12)

**IV இன்னும் சில துன்பங்களும் உபத்திரவங்களும் தேவனை மகிமைப்படுத்தும் வகையில் ஏற்படுகின்றன.** யோவான் நற்செய்தி நூலில் நாம் வாசிக்கிற பிறவிக் குருடன் விஷயத்தில் சீஷர்கள் கேட்ட கேள்விக்கு ஆண்டவர் அளித்த பதில்' ''இது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்'' என்கிறார் (யோவான் 9:3) அதே நற்செய்தி நூல் 11-ம் அதிகாரத்தில் மீண்டும் இயேசு ''இந்த வியாதி மரணத்துக்கேதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது. தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்'' என்கிறார். (யோவான் 11:4)

**V சில சோதனைகளும், துன்பங்களும் நம்மை கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பெற்றுக் கொள்ள உதவுகிறது.**

குயவன் சட்டி பானைகள் செய்வதைக் கவனித்து பாருங்கள் அவைகளை வனைவதற்கு முன்னர் அதை நன்றாகப் பிசைந்து, மிதித்துப் பதப்படுத்துகிறான். அதைப் போன்று நமக்கு நேரிடுகிற துன்பங்கள் நம்மை கர்தருக்கேற்ற பிள்ளைகளாக மாற்றுகிறது. ''உபத்திரவம் பொறுமையையும் பொறுமை, பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது என்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்''. என்கிறார் பவுல் (ரோமர் 5:34)

**VI நாம் கர்த்தரைச் சார்ந்து நிற்க ஏவுகிறது''.** கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனி கொடுக்க மாட்டாதது போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்க மாட்டீர்கள்.

நானே திராட்சைச்செடி; நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையன்றி உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது' என்கிறார் இயேசு (யோவான் 15:4'5) அப்போஸ்தலன் பவுல் கூட ''ஆயினும் பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் என்று கலா 2:20லும். அதற்கு அவர் என்கிருபை உனக்குப் போதும்; பலவீனத்தில் என் பலம் பூராணமாய் விளங்கும் என்றார்.

ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோசமாய் மேன்மை பாராட்டுவேன்.

அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாக இருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தனைகளிலும், நெருக்கங்களிலும் துன்பங்களிலும் இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்'' என்கிறார் (2 கொரி 12:9,10)

## VII நம்முடைய வாழ்க்கையைத் தூய்மைப்படுத்த உதவுகிறது

சங்கீதக்காரன் ''எங்களைச் சோதித்தீர்; வெள்ளியை புடமிடுவது போல எங்களைப் புடமிட்டீர்

எங்களை வலைகளில் அகப்படுத்தி எங்கள் இடுப்புகளின் மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர். மனுஷரை எங்கள் தலையின் மேல் ஏறிப்போகப் பண்ணினீர். தீயையையும், தண்ணீரையும் கடந்து வந்தோம், செழிப்பான இடத்தில் எங்களை கொண்டு வந்துவிட்டீர் என்று தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களுக்கு ஈடுகட்டி பல மடங்கு ஆசீர்வாதங்களைக் கொடுத்ததாக மகிழ்ச்சி தெரிவிக்கிறார் (சங் 66:10-12)

அப்போஸ்தலன் பேதுரு'' இதிலே நீங்கள் மிகவும் சந்தோசப்படுகிறீர்கள் என்றாலும் துன்பப்பட வேண்டியது அவசியமாதலால் இப்போது கொஞ்ச காலம் பல விதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் ''என்கிறார் (1 பேதுரு 1:6,7)

## சில துன்பங்கள் நம்மைச் சீர்திருத்தம் செய்வதற்காகக் கொடுக்கப்படுகின்றன.

''கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல, உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்.

நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாய் இருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?

எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே.

அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டுமல்லவா?

அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்ச காலம் சிட்சிக்கிறார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.

''எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்'' என்கிறார் எபிரேய நிருப ஆசிரியர் (எபி 12:5-11).

**இன்னும் சில துன்பங்கள் நம்முடைய ஊழியத்தை அனுபவரீதியாகச் செய்ய உதவுகிறது.**

''தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே எந்த உபத்திரவங்களிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்.

எப்படியெனில் கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது போல கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது.

ஆதலால் நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும், இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் ஆறுதல் அடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும், இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் பாடுபடுகிறது போல நீங்களும் பாடு பட்டுச் சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்பு பலன் செய்கிறது.'' 2 கொரி 1:4-6.

ஆகவே, நண்பனே, சகோதரியே கலங்க வேண்டாம். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்த்து, அவருடைய பிள்ளைகளுக்கு நன்மையே செய்கிறார் என்று அறிந்து நம்பிக்கையோடு நம்முடைய நாட்களை அவருடைய பணியில் செலவிடுவோமாக.

**E.Z. செல்வநாயகம்**

# என் நிலை சரியானது தான் என்று நான் எப்படி அறிந்து கொள்வது

ஏராளமான மதங்கள், அந்த மதங்களின் பெயரால் பல்வேறு ரகமான போதனைகள் ஒரு மத போதனைக்கும், மற்றொரு போதனைக்கும் ஏகப்பட்ட முரண்பாடுகள் - அப்பப்பா!

ஒரு சராசரி மனிதன் எது உண்மை, எது பொய்; எது சரி எது தவறு என்று கண்டு பிடிக்க முடியாமல் குழம்பிப் போய் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது ஒவ்வொரு மனிதனும் தான் சொல்கிறதும் நம்புவதுமே சரி என்றும் மற்றவர்கள் சொல்வதும் செய்வதும் தவறு என்றும் சொல்வது உலக வழக்கம். ஆகவே நாம் தான் சிந்தித்துப் பார்த்து சரியான முடிவு எடுக்க வேண்டும்.

மேற்கண்ட குழப்பமான சூழ் நிலையில் உண்மை எது என்றும் சரியான வழி எது என்றும் கண்டுபிடிக்க இயலவில்லையென்றால் நமக்கு எதிர்காலத்தைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும் எவ்விதமான நம்பிக்கையும் இருக்க முடியாது. நாம் முயன்று ஊன்றிக் கவனித்தால் உண்மை, சரியான வழி ஆகியவைகளைக் கண்டு கொள்வது சாத்தியமே.

இயேசு சொன்னார் ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயில்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவான் 14:6) இயேசு கூறிய இந்தக் காரியம் நமக்கு ஆறுதல் அளிக்கிறதாய் இருக்கிறது.

ஆகவே இயேசுவின் போதனைகளைக் கேட்டு, அதை விசுவாசித்துக் கீழ்ப்படிந்து வாழ்ந்தால் நாம் சரியான வழியில் போகிறோம் என்றும், வரப்போகிற உலகத்தில் நாம் மகிழ்ச்சியாக இருக்கமுடியும் என்ற நம்பிக்கையுடனும் இருக்கலாம்.

ஆகவே, நாம் பிரச்னையின் அடித்தளத்திற்குச் சென்று, படிப்படியாக மார்க்க சம்பந்தமான காரியங்களை அணுகுவோம். அதுவே, சரியான வழி. **முதலாவது** நாம் சரியான பாதையில் போய்க் கொண்டிருக்கிறோமா? என்று அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் இருக்கவேண்டும். நாம் உண்மையைப் புரிந்து கொள்ளவேண்டும் என்ற வாஞ்சையுடன் திறந்த மனதுடன் விருப்பத்தோடு காரியங்களைப் படிக்கவும், கவனிக்கவும் வேண்டும். ஏதோ சொல்லுகிறார்கள் சொல்லிவிட்டுப் போகட்டுமே நாம் ஏன் மறுப்புத் தெரிவித்து, சொல்லுகிறவர்களைத்

துக்கப்படுத்த வேண்டும் என்ற மனோபாவத்தை நான் இங்கே குறிப்பிடவில்லை. கர்த்தருடைய வசனம் என்ன சொல்லுகிறது என்று அறிந்து கொள்ளும் வாஞ்சையைக் குறிப்பிடுகிறேன்.

பெரும்பான்மையான மக்கள் தாங்கள் நம்புகிறதும் சொல்லுகிறதுமே சரி மற்றவர்களிடத்திலிருந்து கற்றுக் கொள்ளுவதற்கு ஒன்றும் இல்லை என்று நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட நிர்விசாரமான போக்கு தான் பலர் தவறான பாதையில் பயணம் செய்வதற்கு முக்கியமான காரணமாக இருக்கிறது.

**இரண்டாவது** கர்த்தருடைய சித்தம் என்ன என்று அறிந்து கொள்வதற்கு நீங்களே உங்கள் வேதாகமத்தைத் திறந்து வாசித்துச் சிந்திக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; மற்றவர்களைச் சார்ந்து இருக்கக் கூடாது. ஏற்கனவே விசுவாசித்துக் கொண்டிருக்கிற காரியங்களுக்கு ஆதாரம் தேடாமல், ''கர்த்தாவே, நீர் சொல்லும், அடியேன் கேட்கிறேன்'' என்ற மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதுவே சரியான வழி ''வேத வாக்கியங்களை ஆராய்ந்துயிருங்கள் என்று சொல்லப்பட்டிருப்பதின் கருத்தும் அதுதான் (யோவான் 5:39) அது போக, பரிசுத்த ஆவியானவரும் ''நீவெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் இருக்க வேண்டும்'' என்கிறார் (2 தீமோ 2:15). மீண்டும் வேறு ஒரு இடத்தில் இயேசு ''கேளுங்கள்; அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.

ஏனென்றால் கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்'' (மத் 7:7,8) என்கிறார். இவைகளெல்லாம் தேவ ஆவியினால் ஏவப்பட்ட பேருண்மைகள். இவைகள் தேவனுடைய அதிகார பூர்வமான அறிவுரைகளும் எச்சரிப்புகளும் ஆகும். இவைகளை நம்பி ஒருவன் கீழ்ப்படிவானானால் அவன் இரட்சிக்கப்படுவான் என்பதற்குச் சந்தேகமில்லை.

**மூன்றாவதாக** நீங்கள் ஏற்கனவே கிறிஸ்தவர்கள் தான் என்று சொல்வீர்களானால் நீங்கள் நம்புகிறதும் செயல்படுத்துவதும் கர்த்தருடைய ஆலோசனைகள் அடங்கிய வேதத்தின்படி இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள் (1 தெச 5:21)

நீங்கள் நம்புவதும் செயல்படுத்துவதும் கர்த்தருடைய வார்த்தைகளின்படி இல்லையென்று தெரிந்தால் தேவைப்பட்டு

மாற்றங்களைச் செய்து கொள்வதற்கு வெட்கப்படாதீர்கள். உண்மையை ஏற்றுக் கொள்வது ஆண்மை; கோழைத்தனம் அல்ல. இவ்வளவு காலமாக பாட்டன் பூட்டன் காலத்திலிருந்து விசுவாசித்துக் கொண்டு வந்த பழக்க வழக்கங்களை எவரோ சொல்லுகிறார்கள் என்று மாற்றிக் கொள்வதா என்ற பிடிவாதமான போக்கு ஆபத்தானது. உண்மை என்று தெரிந்ததை எவ்விதமான தயக்கமும் காட்டாமல் ஏற்றுக் கொள்வது கர்த்தருக்குப் பிரியம் அப்பொல்லாவைப் பின்பற்றுங்கள் அப் 18:24-28

**நான்காவதாக** வேதாகமத்தை வாசிக்கும் போது கருத்தோடு வாசிக்க வேண்டும். இயேசு, தன் சபையைக் கட்டுவேன் என்று சொல்லுகிறதை எடுத்து கொள்வோம். (மத் 16:18) வேதாகமத்தில் எங்கெல்லாம் சபையைப்பற்றி வாசிக்கிறோமோ அவைகளெல்லாம் கிறிஸ்து கட்டுவதாகச் சொன்னாரே அந்தச் சபை தான் நினைவுக்கு வரவேண்டும். மனிதரால் தோற்றுவிக்கப்பட்டு சபைகள் என்று பெயர் சூட்டப்பட்டிருக்கும் நிறுவனங்களெல்லாம் கர்த்தருடைய அங்கீகாரம் பெறாதவை என்கிற நிலையை மேற்கொள்ள வேண்டும்.

விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மாற்கு 16:16ல் வாசிக்கிறோம். மனிதர்கள் தேவ ஆவியால் ஏவப்பட்டபட்ட கட்டளையைப் புறக்கணித்து விட்டு விசுவாசித்தால் போதும் நீ இரட்சிக்கப்படுவாய் பின்னர் உன் சௌகரியம் போல் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளலாம் என்று போதிப்பவர்களை ஏற்றுக் கொள்ளக் கூடாது (II யோவான் 9-11)

திருமுழுக்கு என்றால் தண்ணீரில் முழுகி எழவேண்டும் என்பது வேதாகம போதனை (ரோமர் 6:3,4 கொலோ 2:12; அப் 8:35-39) அதற்கு மாற்று ஏற்பாடு கிடையாது. ஆனால் சிலர் தெளித்தும், ஊற்றியும் கூட திருமுழுக்குக் கொடுக்கலாம் என்று போதிக்கின்றனர்.

வேதாகமத்தோடு எதையும் கூட்டக்கூடாது, எதையும் நீக்கிப் போடவும் கூடாது என்று வேதாகமம் கண்டிப்பான முறையில் எச்சரிக்கிறது (வெளி 22:18:19; கலா 1:6-9) அதாவது வேதாகமம் என்ன சொல்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் கடைப்பிடிக்க வேண்டும். கூட்டவோ குறைக்கவோ கூடாது. ஆனால், மனிதர்கள் தங்களுக்குச் சௌகரியமானபடி பல சந்தர்ப்பங்களில் வேதாகமத்துக்கு திருத்தங்களை கொடுத்து கர்த்தருக்கே உரிய அதிகாரத்தில் தலையிட்டு உபதேசச் சட்டங்களை மாற்றியிருக்கிறார்கள். கர்த்தருக்கும் அவருடைய வசனங்களுக்கும் உரிய மரியாதை வழங்க விரும்புபவர்கள் அவர்-

களுடைய தலையீட்டை நிராகரித்துவிட்டு கர்த்தருடைய கட்டளைகளை பின்பற்ற வேண்டும்.

ஐந்தாவதாக மோசேயின் பிரமாணத்துக்கும், இயேசு கிறிஸ்துவின் பிரமாணத்துக்கும் உள்ள வித்தியாசத்தை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். மோசே கொடுத்த நியாயப் பிரமாணத்தை நாம் குறைத்து மதிப்பீடு செய்கிறோம் என்று யாரும் எண்ணி விட வேண்டாம். அதுவும் தேவனால் கொடுக்கப் பட்ட பிரமாணம் தான். ஆனால் அது ஒரு குறிப்பிட்ட இனத்தவ-ராகிய இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதின் அதி-காரம் கிறிஸ்துவின் சிலுவை மரணம் வரை அமுலில் இருந்தது. கலா 3:16-19.

அதற்குப் பிறகு கிறிஸ்துவின் பிரமாணம் அமுலுக்கு வந்தது யோவான் 1:17; எபி 9:15. இப்போது நாம் கிறிஸ்துவின் பிர-மாணத்தின் கீழ் வாழ்கிறோம். மோசேயின் பிரமாணத்தின் கீழ் அல்ல. அப்படியானால் பத்துக் கட்டளைகள் செல்லாதா? என்ற கேள்வி எழலாம். ஆம் நிச்சயமாக இன்றைக்கு கிறிஸ்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிற நமக்கு அது அவசியமில்லை. கிறிஸ்து-வின் பிரமாணமே நம்மைக் கட்டுப்படுத்தும். கிறிஸ்துவின் பிரமாண மும் கொலை செய்வதையும் திருடுவதையும் விபசாரம் செய்வதை யும் கண்டிப்பதுடன் நில்லாமல் இன்னும் ஒருபடி மேலே சென்று அவ்வித எண்ணம் மனதில் எழுவதேகூடக் குற்றம் என்று கூறு-கிறது (மத் 5:21-28).

அப்படியானால் நியாயப் பிரமாணத்தின் நோக்கம் என்ன என்பதை பவுல் விளக்க முற்படும்போது ''இவைகள் எல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது உலக முடிவு காலத்தில் உள்ள நமக்கு எச்சரிப்பு உண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது'' (1 கொரி 10:11) முன்பு எழுதியிருக்கிறவைகளெல்-லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது (ரோமர் 15:4) என்கிறார். மோசேயினால் கொடுக்கப்பட்ட நியாயப் பிரமாணத்-துக்கும், கிறிஸ்துவின் பிரமாணத்துக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்வதற்கு எபி 9:11-16; 10:9,10 ஆகிய வசனங்-களை கவனமாய் வாசித்து அறிந்து கொள்ளுங்கள்.

**ஆறாவதும்** முடிவுமாக தேவனுடைய வசனத்தை வாசித்து உண்மையைப் புரிந்து கொண்ட பிறகு அதற்குக் கீழ்படிந்து உங்கள் வாழ்க்கையில் அதைக் கடைபிடியுங்கள். அறிவு நல்லது தான். ஆனால் அதுவே போதாது. அல்லது விசுவாசம் மட்டுமே ஒருவனை இரட்சிக்காது. உங்களுக்குத் தெரிந்திருக்கிற உண்மைக்கும் விசு-

வாசத்துக்கும் ஏற்றபடி வாழ்ந்து காட்டவேண்டும் நீங்கள் கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்தால் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுங்கள் (யோவான் 14:15) மனந்திரும்புங்கள் (லூக் 13:3). கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுவீர்கள் (மத் 10:32) பாவ மன்னிப்புக்காக திருமுழுக்குப் பெற்றுக்கொள்ளுங்கள் (அப் 2:38) அப்படி நீங்கள் செய்தால் கர்த்தர் உங்களை இரட்சிப்பார் (மாற்கு 16:16) தம்முடைய சபையிலும் சேர்த்துக் கொள்வார். (அப் 2:47) அதன் பின் நீர் வாரத்தின் முதலாம் நாளில் கர்த்தரை ஆராதியுங்கள் (அப் 20:7) முடிவு பரியந்தம் விசுவாசமுள்ளவர்களாக வாழ்ந்தால் கர்த்தர் உங்களுக்கு ஜீவ கிரீடத்தை தருவார் (வெளி 2:10) இவைகள் எல்லாம் செய்வதற்கும் கைக்கொள்வதற்கும் எளிமையாக இல்லையா? ஆனால் இவைகளை எல்லாம் செய்தால் நாம் சரியாக இருக்கிறோம் என்று பொருள் என்று எதை வைத்து அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்?

என் நண்பனே! சகோதரியே! தேவன் பொய்யுரையாதவர் என்பதை நம்புகிறாய் என்று விசுவாசிக்கிறேன் அப்படியானால் அவைகள் சரியாக இருந்தே தீரவேண்டும்.

ஆனால் ஒரு காரியத்தை மறந்து விடாதீர்கள். தேவன் எதை விரும்புகிறார் என்பதைப் பகுத்துப் படித்துத் தெளிவாகத் தெரிந்து கொண்ட பிறகு தான் செயல்பட வேண்டும். அப்படிச் செய்தால் தான் எதிர் பார்க்கிற பலன் கிடைக்கும்.

J.C. சோட்

## நாம் மோசேயின் சட்டத்திற்கு இன்று கட்டுப்பட்டவர்களா?

''...என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனி கொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள். ...இப்பொழுதோ...நியாயப்பிரமாணத்தினின்று விடுதலையாக்கப் பட்டிருக்கிறோம்'' (ரோமர். 7:4,6). எனவே நியாயப்பிரமாணமாகிய பழைய ஏற்பாடு நம்மைக் கட்டுப்படுத்தாது.

# நல்ல தாயார்

பெண்கள் தாய்மை அடைவது இயற்கை. ஆண்டு தோறும் கோடிக்கணக்கான பெண்கள் தாய்மையடைந்து கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்கள் அதை ஒரு திட்டத்தோடும், நோக்கத்தோடும் செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஒரு பெண்ணின் வயிற்றில் சிசு உருவாவதற்கான வித்து இட்டு விட்டால் அவள் அதைப்பற்றி அக்கறை கொள்கிறாளோ இல்லையோ அது தானாக வளர ஆரம்பித்து விடுகிறது.

தற்காலத்தில் பிள்ளைப் பேறு திட்டமிடப்படுவதில்லை என்பதுகூடப் பரவாயில்லை. அதைக் கருவிலேயே கொன்று விடுவது பாவமல்ல என்ற மனநிலை சர்வ சாதாரணமாகி விட்டது. அது தேவனுக்கு விரோதமான பாவம் என்றும், ஏதும் அறியாத அந்தச் சிசுவுக்குச் செய்யப்படுகிற அநீதி என்றும், ஏன் சம்பந்தப்பட்ட அந்த பெண்ணுக்கே கூட ஆபத்தானது என்றும் உணராமல் இருக்கிறார்கள். ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சிசுக்களை கருவிலேயே சிதைத்து விடுவதை சமுதாயமும், அரசாங்கமும் ஏதேதோ காரணங்களைச் சொல்லி நியாயப்படுத்தினாலும் தேவனுடைய பார்வையில் அது குற்றம் குற்றமே.

எப்படியிருந்த போதிலும் பல ஆயிரக்கணக்கான குழந்தைகள் இவ்விதமான இடர்பாடுகளுக்குச் சிக்காமல் தப்பி உரிய காலத்தில் பிறந்து கொண்டு தான் இருக்கின்றன. அவைகளில் பல ஏழைக் குடும்பங்களிலும் சில பணக்காரக் குடும்பங்களிலும், சில அளவில் சிறிய குடும்பத்திலும், சில பெரிய குடும்பங்களிலும் பிறக்கின்றன. அங்கே அவைகள் பிறந்ததினால் மகிழ்ச்சியும் இருக்கலாம். சில வேளைகளில் துக்கம் கூட ஏற்படலாம். அது அந்தந்த குடும்ப சூழ்நிலைகளைப் பொறுத்தது.

ஆனால் தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ள முடியாத அந்த அப்பாவிச் சிசுக்கள் ஒவ்வொன்றிற்கும் தேவன் ஒரு தாயைக் கொடுத்திருக்கிறார். என்னே தேவனின் ஞானமும் அக்கறையும்!

இங்கே இரண்டொரு கேள்வி. தாய் என்ற சொல்லின் முழுப் பொருள் என்ன? ஒரு குழந்தையைப் பத்து மாதம் சுமப்பது மட்டும் தானா? இந்த கேள்விகளுக்கு விடை காண முயலுவோம்.

## 1. தாய் என்பவள் அன்பே உருவானவள்.

எப்பொழுது ஒரு கரு உருவானதோ அன்று முதல் அது ஒரு குழந்தையாக பிறக்கும் வரை ஒவ்வொரு நிலையிலும், அசைவிலும் அந்தப் புதிய உயிரை நேசிக்கிறாள். பின்னர் குழந்தை பிறந்து தன்னைத் தானே பாரமரித்துக் கொள்ள முடியாத பச்சிளங் குழந்தையாக இருக்கும் போது அவளுடைய அன்பு பெருகுகிறது. பின்னர் குப்புற விழுந்து, தவழ்ந்து, நடை பயின்று, மழலை பேசி, பள்ளிக்குச் செல்லும் காலம் வரை ஒவ்வொரு பருவத்திலும் அவளுடைய அன்பும் கூடவே வளருகிறது, பூரிப்பும், மகிழ்ச்சியும் அடைகிறாள். அது ஆளாகி தன்னைத்தானே பராமரித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டாலும் அவளுடைய அன்பு மட்டும் தணிவதில்லை. உண்மையிலேயே தாயன்புக்கு உலகில் நிகரேது?

## 2. தாய் என்பவள் மென்மையானவள் :

தான் பெற்றெடுத்த அந்த அருமைச் செல்வம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்கிற காலத்திலும், நோயுற்று அவதிப்படும்போதும், வேறு எப்படிப் பட்ட சூழ்நிலையிலும் வேறு எவர் வேண்டுமானாலும் கசந்து போய் வெறுத்து விடலாம். ஆனால் பெற்றெடுத்த தாய் மட்டும் ஒரு போதும் சலிப்படைந்து வெறுத்து விடமாட்டாள். இறைவன் ஒவ்வொரு குழந்தையையும் நேரடியாக கவனிக்க முடியாது. ஆகவே தான் தாயைத் தன் பிரதிநிதியாக ஏற்படுத்தியிருக்கிறார் என்று ஒருவர் சொன்னார். எவ்வளவு உண்மை!

## 3. தாய் என்பவள் மன உருக்கமுள்ளவள் :

நான் சிறு பெண்ணாக இருந்தபொழுது சில மாற்றங்களும் துன்பங்களும் எனக்கு ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றன. ஆனால் அவைகள் ஒன்றும், என் குழந்தைகள் துன்பப்படுவதைக் காணும்போது எனக்கு ஏற்படுகிற துன்பங்களின் அளவுக்கு, என்னைக் கவலைப்படவைத்ததில்லை என்று துணிந்து கூறுவேன் எனக்கு இருக்கிற எல்லா வித பலத்தையும், வாய்ப்பையும் பயன்படுத்தி அவர்களுடைய துன்பங்களை எப்பாடுபட்டாவது துடைத்துப் போட வேண்டும் என்று என் உள்ளம் துடிக்கும். எந்த ஒரு நல்ல தாயும் என்னைப் போலவே நினைப்பாள் என்பதில் சந்தேகமில்லை.

## 4. தாய் என்பவள் தியாக சிந்தையுள்ளவள்

ஒரு குடும்பத்தில் எல்லாருக்கும் புத்தாடைகள் வாங்கப் போதிய பணம் இல்லாவிட்டால் யாருக்குப் புத்தாடையில்லாமல் போகும்? எல்லாருக்கும் பிடித்தமான உணவு ஒன்றைத் தயாரிக்-

கிறோம். திடீரென்று ஒரு விருந்தாளி வந்து விட்டாலோ அல்லது எப்படியோ குறைவுபட்டு விடுகிறது, யார் எனக்கு வேண்டாம் எனக்குப் பசியில்லை என்று மழுப்பி விட்டு மற்றவர்களுக்கு பரிமாறி மகிழ்வாள்? அல்லது இது எனக்குப் பிடிக்காது, வேறே உணவு எனக்கு இருக்கிறது, நீங்கள் எல்லாரும் பகிர்ந்து கொள்ளுங்கள் என்று கூசாமல் பொய் சொல்லி, தன் ஆசையை மறைத்து தியாகம் செய்வாள்? நிச்சயமாகத் தாய் தான். இதில் மட்டும் அல்ல எப்பொழுதெல்லாம் ஒரு குடும்பத்தில் ஏதாவது ஒருவர் தியாகம் செய்ய வேண்டும் என்று வந்தால் தாயார் தான் முதல் நபர், அவள் அப்படிச் செய்யவேண்டும் என்று பிறர் கட்டாயப்படுத்துவதினால் அல்ல அவர் தன் குடும்பத்தை நேசிக்கிற படியால் தானே மனமுவந்து செய்கிற அன்புச் செயல்.

## 5. தாய் ஒழுக்கத்தைக் கற்பிப்பவள்

ஒரு தாய் தன் குழந்தைகளை உண்மையாகவே நேசிக்கிறவளாயிருந்தால் அவள் தன் பிள்ளைகள் தவறு செய்தால் கொஞ்சிக் கொண்டிருக்க மாட்டாள். கண்டிப்பும் கறாருமாக இருந்து அவர்கள் தவறுகளைக் கண்டித்து உணர்த்துவாள். குழந்தைகளுக்கு எது நல்லது எது கெட்டது என்று அவ்வளவாய்த் தெரியாது. ஆகவே தாயார் சொல்லித் தான் தெரிந்து கொள்ள முடியும். தகப்பனார் எப்பொழுதுமே வீட்டில் இருந்து கொண்டு பிள்ளைகளைக் கண்காணித்துக் கொண்டு இருக்க முடியாது. ஆகவே அவர்கள் செய்கிற தவறுகளைச் சுட்டிக் காட்டிக் கண்டித்து உணர்த்துவது தாயாரின் கடமையாகும்.

## 6. தாய் நற்பண்புகளைக் கற்றுத் தருபவள்

பெண்களாகிய நாம் ஞானமுள்ளவர்கள் நம்முடைய குழந்தைகளுக்கு எது தேவை எது தேவை இல்லை என்பதைக் கணவன் சொல்லித் தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டு இருக்கக் கூடாது. அவர்கள் வீட்டிலும், சமுதாயத்திலும் எப்படி எப்படிப் பழக வேண்டும் என்று கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வீட்டுப் பாடம் சொல்லிக் கொடுப்பது போன்ற காரியங்களில் கூட உதவலாம். அவைகள். எல்லாவற்றையும் விட ஆவிக்குரிய காரியங்களில் அவர்கள் வளருவதற்கான பயிற்சியைக் கொடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

## 7. தாய் தன்னுடைய குழந்தைகளை நன்கு அறிவாள்

குழந்தைகளுடைய போக்கும், சுபாவமும் எப்படிப்பட்டது என்பதை மிகத் துல்லியமாக தெரிந்து கொள்ளும் வாய்ப்புள்ளவள் தாயே. குழந்தைகளுடைய உணர்வுகள், பழக்க வழக்கங்கள்,

அவர்களுடைய பலம் பலவீனம் யாவும் நன்றாகத் தெரியும். ஆகையால் அவர்களுக்குத் தேவையான உதவிகளையும், ஆலோசனைகளையும் தந்து அவர்களுக்கு வழி காட்ட வேண்டும்.

**8. தாய் ஜெப சிந்தையுள்ளவள்**

தாய் எல்லா நேரங்களிலும் தன் பிள்ளைகளோடு இருக்க முடியாதல்லவா? மேலும், அவர்களுக்குத் தேவையான உதவிகளையும், ஆலோசனைகளையும் முழு அளவில் தர இயலாது. ஆகவே அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் சம்பூர்ணமாய்த் தர வல்லமையுள்ள தேவனை அவர்கள் கெட்டியாகப் பிடித்து கொள்ள அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். வேதம் வாசித்து அதன் பொருளை உணரவும், ஜெபிக்கவும் அவருடைய ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் தன் மூன் மாதிரியினாலே கற்றுத் தரவேண்டும்.

மேற்கூறிய மாதிரி தங்கள் பிள்ளைகளைப் பேணி வளர்ப்பவளே சிறந்த தாய். சகோதரியே, நீ எப்படிப் பட்ட தாயாக இருக்கிறாய்?

**பெட்டி பர்ட்டன் சோட்**

### கிறிஸ்தவர்கள் ஆராதனையில் கூடுவது எப்போது?

''வாரத்தின் முதல் நாளில், அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்தது, அவர்களுடன் சம்பாஷித்து, நடு ராத்திரி மட்டும் பிரசங்கித்தான்''

(அப். 20:7).

கிறிஸ்தவர்கள் அனைவரும் வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் கூடவேண்டும்.

நீங்கள் அங்கத்தினராக இருக்கும் சபை, மேலே கண்ட வேதாகமப் பதில்களுக்கு ஒத்து வராமல், முரண்படுகிறதா? நீங்கள் யாரைப் பின்பற்றப் போகிறீர்கள்—தேவனையா? மனிதனையா? தேவனுடைய வழி ஒருபோதும் தவறாக இருக்க முடியாது. சிந்தியுங்கள்; செயல்படுங்கள்.

# வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சியை பலர் இழந்து கொண்டிருக்கின்றனர்.

''.... வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்'' (அப். 20:35) என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவு கூறும்படி எபேசு பட்டணத்து சபை மூப்பர்களுக்கு அப்போஸ்தலன் பவுல் கூறினார். நமது தேவனுடைய வார்த்தைகளின் சத்தியத் தன்மையைக் குறித்து ஒரு போதுமே அறியாத காரணத்தால், சபை அங்கத்தினர்களில் பலர் ஆர்வமற்று, செயலற்று, இறுதியில் ஓடியே போய் விடுகின்றனர். 'எனக்கு உதவுங்கள்' என பிச்சைப் பாத்திரத்தை கையிலேந்தி, எப்போதும் பிறரிடமிருந்து எதையாவது எதிர்பார்த்தே பழக்கப்பட்டுப்போன சில ஜென்மங்களின் இத்தகைய மனோ பாவமானது, பிறருக்கு உதவக்கூடிய எண்ணற்ற சந்தர்ப்பங்களை அவர்களின் 'கண்களுக்கு திரை போட்டு மறைத்து விடுகிறது.

சபையின் போதகரிடம் சென்று, தனது பெயரை சபை ஏட்டிலிருந்து நீக்கிப் போட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டான் ஒரு மனிதன். சிறிது யோசித்த போதகரும், 'சரி: உன் பேரை சபையிலிருந்து எடுத்துப் போடுகிறேன்; ஆனால் அதற்கு முன்னர் ஒரு சிறு உதவி செய்வாயா? எனக் கேட்டார். அம்மனிதன் சம்மதிக்கவே, போதகர் அவனிடம், ''இதோ இந்த முகவரியிலுள்ள ஏழைக் குடும்பத்திற்கு ஒரு வாரத்திற்குத் தேவைப்படும் மளிகை ஜாமான்களை வாங்கி அவர்களிடம் கொடுத்து விட்டு வா'' எனக் கூறினார். அம்மனிதனும் அவ்வாறே செய்து விட்டு, திரும்பி வந்து போதகரிடம் வேண்டினான். ''ஐயா, என் பெயரை நீக்க வேண்டாம். நான் என் வாழ்நாளிலே என்றுமே அனுபவிக்காத அளவற்ற மகிழ்ச்சியை இன்று தான் அனுபவித்தேன். தொடர்ந்து, பிறருக்கு உதவும் சந்தர்ப்பங்களை எனக்குத் தாருங்கள்''.

வாழ்க்கையில் முற்றிலுமாக விரக்தியடைந்த மற்றொரு மனிதன் ஊரின் எல்லையில் ஓடும் நதியில் குதித்து தன் உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணி, தெருவிலே வேகமாய்ச் சென்று கொண்டிருந்தான். ஒரு சிறுவன் ஓடிவந்து அம்மனிதன் ஆடையைப் பற்றி இழுத்து, ''ஐயா, தயவு செய்து எங்களுக்கு உதவுங்கள்; நாங்கள் ஆறு பேர், ஆகாரம் எதுவுமின்றி மடிந்து கொண்டிருக்கிறோம் ''என பரிதாபமாகக் கெஞ்சினான். கொஞ்சம் எரிச்சலுடன் சிறுவனை நோக்கிய அம்மனிதன், ''உலகத்தை விட்டுப் போகும் முன்னால் இந்த ஒரு காரியத்தை மட்டும் செய்து விடலாம்;

கொஞ்ச நேரம் தாமதமாகும்'' என தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு, அப்பையனோடு அவனுடைய வீட்டுக்குச் சென்றான். பின்னர் அவ்வீட்டில் ஏற்பட்ட அனுபவத்தை விரிவாகக் கூறினான் அம்மனிதன். ''அப்பையன் என்னை அழைத்துச் சென்று காட்டிய வறுமையின் கோரக் காட்சியை என்னால் விவரித்துக் கூற இயலாது. என் பணப்பையை எடுத்து அவர்களின் பக்கமாக வீசினேன். அதை ஆவலுடன் எடுத்துக் கொண்ட அவர்களின் வாய்களினின்று நன்றிப் பெருக்கால் வெடித்துச் சிதறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் என் நெஞ்சை உலுக்கிவிட்டன. என் கண்கள் குளமாயின; என் இதயம் சுக்கு நூறாக கிழிந்தது. ''நான் மீண்டும் நாளை வருகிறேன்'' என அவர்களிடம் உரக்கக் கத்தினேன். இத்தனை மகிழ்ச்சியையும், அதுவும் சொற்பச் செலவிலே, அளித்த இவ்வுலகை விட்டுப் போக நினைத்த நான் எத்தனை பெரிய முட்டாள்''

நியாயத் தீர்ப்பு நாளின் காட்சியை இயேசு வர்ணிக்கும் போது, ராஜாவின் வலது பக்கத்தில் நிற்பவர்களின் மகிழ்ச்சியைப் பற்றி வலியுறுத்திக் கூறுகிறார். ''வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன். எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார். அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மை பசியுள்ளவராகக் கண்டு உமக்குப்போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மை தாகமுள்ளவராகக்கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக்கண்டு உம்மைச் சேர்த்துக் கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக்கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும், காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: **மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்** என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.'' (மத். 25:34-40).

பல சமயங்களில் பிறருக்கு உதவுவதில் சிறிது நேரத்தை செலவிடக்கூட நாம் விரும்புவதில்லை. நமது சொந்தவேலைகள், சொந்தப் பொறுப்புகள் இவற்றைக் கவனிக்கவே நேரம் சரியாக

இருக்கிறது என்று குறுகிய ஒரு வட்டத்துக்குள்ளே நாம் சுற்றிக் கொண்டிருக்கிறோம்.

ஒருவன் புது குடியிருப்பு ஒன்றிற்கு மாறினான், அப்புது வீட்டை ஒட்டியுள்ள பகுதியில் ஒரு வயதான தம்பதிகள் வசித்தனர். இன்னும் பக்கத்து வீட்டுக் காரர்களைக்கூட அறிமுகம் செய்து கொள்ள அவகாசம் கிடைக்காத நிலையில், ஒரு நடு இரவில் அவனுக்கு தொலைபேசி வந்தது. 'இது என்ன தொல்லை?' என முணுமுணுத்தவாறே தொலைபேசியை அணுகினான். அடுத்த பகுதியில் வசிக்கும் வயதான தம்பதியர்கள் பேசினார்கள்: ''தயவு செய்து எங்கள் பகுதிக்கு வந்து எங்களுக்கு உதவுங்கள்; வீடு முழுக்க தண்ணீர் கொட்டிக் கொண்டிருக்கிறது; ஆனால் எங்கிருந்து வருகிறதென எங்களால் கண்டு பிடிக்க முடியுவில்லை'' எனக் கெஞ்சினர்.

கொஞ்சம் கோபத்துடன் ஆடைகளைச் சரிசெய்து கொண்டே மறுபகுதிக்குச் சென்றான் அம்மனிதன். போகும்போதே தனக்குள் சிந்தித்துக் கொண்டான் : ''எவ்வளவு முட்டாள்த்தனம்; முன்பு இங்கு குடியிருந்தவர்களையும் இப்படித்தான் தொந்தரவு செய்திருப்பார்களோ! எதுவாயினும், இப்பழக்கம் தொடராமல் நான் பார்த்துக்கொள்வேன்'' அடுத்தப் பகுதியை அடைந்து கதவைத் தட்டினான். ஒரு மூதாட்டி கதவை திறந்து வீட்டினுள் அவனை அனுமதித்தாள். அவன் தயங்கினான்.; வீட்டினுள் வெளிச்சத்தைக் காணோம். அதிருப்தியான தொனியில் ''மின் விளக்குகளுக்கு என்ன வாயிற்று? ''எனக் கேட்டான். ''ஓ.. நான் ரொம்ப வருத்தப் படுகிறேன் தம்பி, ஸ்விட்சு போட மறந்துவிட்டேன்; அதனால் தான் இந்த ஒழுக்கைக் கண்டு பிடிக்க உன் உதவியைத் தேட வேண்டியதாயிற்று. நாங்கள் இருவருமே குருடர்கள்'' என்றாள் அம் மூதாட்டி.

பிறருக்கு உதவும் சந்தர்ப்பங்களில் நாம் மிகவும் விழிப்புடன் செயல் பட்டால், பல அவமானங்களையும் குழப்பங்களையும் தவிர்க்க முடியும்.

வாழ்வு என்னும் ஏணியில் நீ ஏறிக் கொண்டிருக்கும் போது, உனக்கு அடுத்து வருபவனுக்கும் ஒரு கை கொடுத்து உதவினால், உன் எதிர்காலத்தில் சிறு சறுக்கல் ஏற்பட நேரிட்டால், உனக்குக் கை கொடுத்து உதவ ஒருவன் தயாராக இருப்பதைக் கண்டு நீ மகிழ்ச்சி அடைவாய். உதவும் கரத்தின் மகிமையைக் காண்பாய்.

**எட்செல் பர்லெசன்** **எஸ். எஸ் ராஜன்**

# நான் ஏன் பிறந்தேன்

மனித வாழ்க்கை பற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றன. மானிடராய் பிறப்பது அரிது! மனிதனாய் பிறந்திருக்கவே கூடாது! வாழ்க்கை வாழ்வதற்கே! வெந்ததை தின்போம், விதிவந்தால் சாவோம்! நரகமாவது மோட்சமாவது இருக்கும்வரை அனுபவிப்போம்!

இவையெல்லாம் வாழ்க்கை பற்றி நாம் கேள்விப்படும் சில மதிப்பீடுகள். இவைகளிலிருந்து மக்களுக்கு வாழ்க்கை பற்றிய ஒரு தெளிவான கருத்து இல்லை என்பது தெளிவாகிறது. வாழ்க்கை என்பது என்ன என்பதை புரிந்து, அதை முறையாக துவங்கும் முன்னரே பலருக்கு அது முடிந்துவிடுகிறது. சிலர் தத்துவார்த்தமாக நான் ஏன் பிறந்தேன்? நான் எங்கிருந்து வந்தேன்? ஏன் வாழ்கிறேன்? எவ்வளவு காலம் வாழப்போகிறேன்? மரணம் நிச்சயம்! அதன் பின் என்ன நிகழும்? என பல வினாக்களை தொடுத்தாலும் அவைகளுக்கு சரியான பதில் தெரியாமல் தவிக்கின்றனர்

மானிட வாழ்க்கையின் துவக்கம், நோக்கம், பிரச்சனை, தீர்வு மற்றும் மறுமை பற்றிய உண்மையை யார்தான் சரியாகச் சொல்ல முடியும்? உலகத்தையும் மனிதனையும் படைத்த மெய்தேவன் தான் இது பற்றிய உண்மையை சரியாகக் கூறமுடியும். எவரும் தற்செயலாகவோ அல்லது விதிவசத்தாலோ பிறந்து, வாழ்ந்து, சாவதில்லை. மனிதன் விலங்குகளை விட எவ்வளவு மேலானவனோ அவ்வளவு மேலான நோக்கம் அவன் வாழ்க்கைக்கு இருக்கிறது.

### மனித வாழ்க்கையின் துவக்கம்

தேவன் உலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் படைத்தார். ஒரு கட்டிடம் பொறியாளரையும் ஒரு ஓவியம் ஓவியரையும் புலப்படுத்துகிறது. அதுபோல தேவனுடைய ஆச்சரியமான படைப்புக்கள் அவர் இருப்பதையும் அவருடைய ஆற்றலையும் உணர்த்துகின்றன. (ரோ 1:18-20)

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது (சங் 19:1) தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான். அவர்கள் தங்களை கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்து வருகிறார்கள். (சங் 14:1)

அவர், முதல் மனிதனாகிய ஆதாமையும் ஏவாளையும் தமது சாயலாக பூரணராக படைத்தார் (ஆதி 2:7, 1:27). நான்

பிரமிக்கதக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன். என் கருவை உம்முடைய கண்கள் கண்டது. என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதேஅவைகள் அனைத்தும் அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புத்தகத்தில் எழுதியிருந்தது என தாவீது தான் தேவனால் படைக்கப்பட்ட விதத்தை கூறுகிறார். (சங் 139:14-16). நாமெல்லாரும் கடவுளின் திட்டப்படி இவ்வுலகில் படைக்கப்பட்டுள்ளோம்.

**வாழ்க்கையின் நோக்கம்**

கடவுள் நமது வாழ்க்கைக்கு சிறந்த நோக்கத்தை வைத்திருக்கிறார். நாம் அவரை தேடி அவருடைய திருவுளப்படி வாழ்வதே அந்த நோக்கம் (மீகா 6:8, அப் 17:26-27). ''படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவை படைத்தான் தன்னை வணங்க'' என்பது முன்னோர் வாக்கு. மெய்தேவனை அறியாமலிருப்பது மனிதனை விலங்குகளுக்கு ஒப்பாக்கிவிடுகிறது. அவரைப் பற்றி அறிந்திருப்பதே மெய்யறிவு (சங் 49:20, நீதி 9:10).

பணம் சேர்ப்பது, பொருள் சேர்ப்பது, உலகை ஆதாயப்படுத்துவது மற்றும் சரீர இச்சைகளின்படி வாழ்வது வாழ்க்கையின் நோக்கமன்று.

பணப்பிரியன் பணத்தினால் திருப்தி அடைவதில்லை. செல்வப்பிரியன் செல்வத்தினால் திருப்தி அடைவதில்லை (பிர 5:10). பண ஆசை எல்லா தீமைக்கும் வேராய் இருக்கிறது (1 தீமோ 6:10).

ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல (லூக் 12:15). உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம் (1 தீமோ 6:7). ஒருவன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என்றார் இயேசு கிறிஸ்து (மத் 16:26). உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போகும், தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனே என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (1 யோவா 1:17).

அப்படியானால் வாழ்க்கையின் நோக்கம் தான் என்ன? ''முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; பின்பு இவைகளெல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும்'' என்றார் இயேசு கிறிஸ்து (மத்-6:33). தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள். இதுவே எல்லா மனிதர் மேலும் விழுந்த கடமை. ஒவ்வொரு கிரியையுமையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்

(பிர. 12:13-14)

## பாவம் - வாழ்வின் பெரும் பிரச்சனை

வறுமை, வேலையின்மை, ஏற்றத்தாழ்வுகள் போன்ற சமூக பொருளாதார பிரச்சனைகள் தீர்வுக்குரியவைகள்.

மனிதனின் ஆன்மீக பாவமும் மெய் தேவனை பற்றிய அறியாமையும் அவனால் தீர்க்க முடியாத பெரும் பிரச்சனையாக இருக்கிறது. தேவன் உலகத்தையும் மனிதனையும் படைத்தார். மனிதன் அவரை உருவாக்கி அமைக்க முடியாது. மனிதன் கட்டிடம் கட்டுவதை பார்த்திருக்கிறோம். கட்டிடம் மனிதனை உருவாக்குவதை நாம் பார்த்ததில்லை.

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம் என்றார் மெய்தேவன் (யாத். 20:3-5).

அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். சிருஷ்டிகரை தொழுது சேவியாமல் சிருஷ்டியை தொழுது சேவித்தார்கள் (ரோ.1:23-25). இம்முயற்சியில் தோன்றிய சமயங்கள் சமூகத்தில் ஏற்ற தாழ்வுகளை உருவாக்கி, தீண்டாமை, சதி, பாலிய விவாகம் பெண் சிசு கொலை, மிருகபலிகள் போன்ற சமூகக் கேடுகளை பேணி வருவதாக கருதப்படுகிறது.

உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராய் இருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. நாம் தேவனுடைய படைப்புகளாயிருக்க, மனுஷருடைய சித்திர வேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது (அப் 17:24,29).

எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்துவிட்டனர் என வேதம் கூறுகிறது (ரோ. 3:23). தேவனுடைய கற்பனைகளை மீறி நாம் யாவரும் பாவம் செய்துள்ளோம். (1 யோவா. 3:4) பாவத்தின் சம்பளம் நரகாக்கினை (ரோ. 5:16,6:23). பாவம் செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான் (யோவா. 8:34). பாவம் மனிதனை வஞ்சிக்கிறது, தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது (ரோ. 7:11, ஏசா. 59:1-2).

ஐயோ! என்னால் திருந்த முடியவில்லையே! ஐயோ! நான் பாவ பழக்கங்களை விட்டுவிட போராடியும் என்னால் விடமுடியவில்லையே என ஏங்கி தவிப்பவர் ஏராளம். அரசு சட்டம் மனிதனை பாவத்திலிருந்து விடுவிக்க முடியவில்லை. பூரண மதுவிலக்கு கொள்கை இதுவரை வெற்றிபெறவில்லை. சமய சன்மார்க்க ஈடுபாடும் அதற்கு நிவாரணமல்ல. 40 நாள் சமய ஈடுபாட்டின் பின் மீண்டும் தவறுகள் தொடருகின்றன. மருத்துவமும் உளவியல் சிகிச்சையும் பாவப் பிரச்சனையை தீர்க்க முடியவில்லை. சுயக்கட்டுப்பாடும் கைக்கொடுக்கவில்லை. பாவம் அவ்வளவு பயங்கரமானது! மனிதன் தன்னை சீர்திருத்தவும் பாவத்திலிருந்து விடுவிக்கவும் முடியாமல் தவிக்கிறான்.

மனிதன் நினைக்கிறபடி பாவம் அவனுக்கு திருப்தியை அல்லது சாதனை உணர்வை கொடுப்பதில்லை. மாறாக அதின் இழிநிலையைப் பாருங்கள்!

| | | |
|---|---|---|
| **சினிமா பழக்கம்** | : | சினிமா பாணி குற்றங்களையும் ஒழுக்கக் கேட்டையும் சமுதாயத்தில் வளர்த்துள்ளன. |
| **மது பழக்கம்** | : | துயரம், வறுமை, அவமானம், நோய் மற்றும் அகால மரணத்தை கொண்டு வருகிறது. |
| **பாலியல் பாவம்** | : | வாழ்க்கையை நரகமாக்கி குடும்பங்களை சிதறடிக்கிறது இந்தியாவில் சுமார் 10 லட்சம் பேரை ''எய்ட்ஸ்'' தொற்றும் அபாயம் உள்ளதாக சுகாதார துறை புள்ளி விபரங்கள் கூறுகின்றன. |
| **புகை பழக்கம்** | : | நுரையீரல் நோயை உண்டாக்கி இந்தியாவில் வருடத்திற்கு சுமார் ஆறு இலட்சம் பேரை கொல்வதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. |
| **போதை பொருட்கள்** | : | இப்பழக்கத்தால் இளைஞர்களின் வாழ்வு அழிந்து வருகிறது. |
| **சூதாட்டம்** | : | வறுமையையும் இழிவையும் ஏற்படுத்துகிறது. |

பாவத்தின் வி ளவாக வரும் குற்ற உணர்வு, பயம், மரணம், வேதனை, தேவ தண்டனை பற்றி சொல்லவே வேண்டாம்.

**தீர்வு**

தேவன் பாவிகளாகிய நம்மை நேசிக்கிறார். பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1 தீமோ. 1;15).

அவர் நமது பாவங்களுக்காக சிலுவையில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். அவர் பிதாவின் வலது பாரிசத்தின் கர்த்தராக உயர்த்தப்பட்டுள்ளார். (1 கொரி.15:3-4, 1 பேது. 3:22).

இயேசுவாலன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின்கீழ் எங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. (அப்.4:12)

தேவன் தமது கிருபையால் இலவசமாக மீட்பையும் சமாதானத்தையும் கொடுக்கிறார். இதற்கு தேவை மனமாற்றம் தான் மத மாற்றம் அல்ல.

தேவன் ஒருவர் உண்டென்றும், இயேசு தேவனுடைய குமாரனென்றும் விசுவாசியுங்கள் (எபி. 11:6, யோவா. 20:30) பாவங்களுக்காக மனந்திரும்புங்கள் (லூக். 13:3, அப். 2:38 17:30), இயேசுவை தேவகுமாரனென்று அறிக்கையிட்டு (ரோ. 10:9-10, அப். 8:37). பாவமன்னிப்பிற்காக திரு முழுக்கு பெற்று இரட்சிக்கப்படுங்கள் (மாற். 16:15-16). கர்த்தர் உங்களை இரட்சித்து தமது சபையில் சேர்த்துக் கொண்டு தூய ஆவியின் வரத்தை கொடுக்கிறார் (மத். 16:18, அப். 2:47, ரோ. 16:16).

## முடிவு

அன்றியும் ஒரு தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபி.—9:27). தேவனை அறியாதவர்களுக்கும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு மீண்டும் வர இருக்கிறார். அப்போது அவருடையவர்கள் மகிமையும் அவரை ஏற்றுக் கொள்ளாதவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையடைவார்கள் (2 தெச. 1;7-10). கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போகும், பூதங்கள் வெந்து உருகிப்போகும், பூமியும் அதிலுள்ள கிரியைகளும எரிந்து அழிந்துபோகும் (2 பேது. 3:10).

அருமை நண்பரே, நீங்கள் ஒருவேளை தெளிவான நோக்கமின்றி வாழ்ந்துகொண்டிருக்கலாம்! உங்கள் வாழ்க்கை பயணம் திசைமாறி போயிருக்கலாம்! எதிர்காலம் இருள் மயமாக தோன்றலாம்! அனைத்தும் இருந்தும் நிம்மதியின்றி வாழ்ந்து கொண்டிருக்கலாம்! ஓயாத போராட்டம், நித்தமும் கண்ணீர், தீராத வியாதி உங்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கலாம்! முதுமையும் தனிமையும் உங்களை வருத்திக் கொண்டிருக்கலாம்!

நாளைக்கு நடப்பது நமக்குத் தெரியாது. நமது வாழ்வு நிலையற்றது. இன்றே இப்பொழுதே ஆண்டவர் இயேசுவுக்கு கீழ்படிந்து பிறப்பின் நோக்கத்தை நிறைவேற்றுங்கள். பிறவிப் பயனை அடையுங்கள். இதைச் செய்யாவிட்டால் உங்கள் வாழ்க்கைக்கு எந்த நோக்கமும் நம்பிக்கையும் இல்லை. இப்படிச் செய்ய தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக. நாங்கள் உங்களை மதித்து நேசிக்கிறோம். இயேசுவில் பிறவி பயனை அடையுங்கள். இதற்காக அவர் உங்களை வருந்தி அழைக்கிறார். இதற்காகவே நாம் பிறந்தோம். இதை வாசித்து விட்டு பிறருக்கும் கொடுங்கள். மேலும் விபரம் அறிய அருகிலுள்ள கிறிஸ்துவின் சபையை அணுகுங்கள்.

ப. பால்ராஜ்

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து இரட்சகராக உயர்த்தப் பட்டுள்ளார். நீங்கள் மன்னிப்பும் வெற்றி வாழ்க்கையும் பெற அவர் உங்களை வருந்தி அழைக்கிறார். (மத் 11:28)

அருமை நண்பரே வாழ்க்கையில் தோல்வியா? ஏமாற்றமா? நித்தமும் கண்ணீரா? ஓயாத போராட்டமா? தீராத வியாதியா? வருத்தும் முதுமையா? தளராதிருங்கள். இயேசு உங்களை விடுவித்து மாற்றவல்லவர்,

தேவை மனமாற்றம்தான். மதமாற்றமல்ல; எண்ண மாற்றம் தான் பெயர் மாற்றமல்ல.

தேவன் ஒருவர் உண்டென்றும், இயேசு தேவகுமாரன் என்றும் விசுவாசியுங்கள் (11:6, யோவா 20:30-31). உங்கள் கடந்த கால பாவங்களுக்காக மனம் திரும்பி, (லூக் 13:3, அப் 17:30). இயேசுவை தேவகுமாரனென்று அறிக்கையிடுங்கள் (ரோம் 10:9-10; அப் 8:37). பாவ மன்னிப்பிற்காக திருமுழுக்கு பெற்று இரட்சிக்கப்படுங்கள். (மாற் 16:15 16. அப் 2:47, மத் 16:18, ரோம (16:16) பின்பு மரண பரியந்தம் உண்மையாய் வாழ்ந்து பரலோக பாக்கியம் அடையலாம் (வெளி 2:10).

இதைச் செய்வதில் உங்களுக்கு என்ன தயக்கம்? இன்னும் எவ்வளவு காலம் துயரமிகு பாவ அடிமைத்தனத்தில் வாழ்வீர்கள்? இன்னும் எவ்வளவு காலம் தோல்வியிலும் ஏமாற்றத்திலும் உழலுவீர்கள்? இலவசமாய் கிடைக்கும் விடுதலையை நீங்கள் ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது? இன்னும் எவ்வளவு காலம் பொய்மையை நம்பி உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்வீர்கள்?

இன்றே இப்போதே இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்படிந்து விடுதலையடையுங்கள், வெற்றி வாழ்க்கையை துவங்குங்கள். நாங்கள் உங்களை மதித்து நேசிக்கிறோம். இயேசுவில் மன்னிப்பும் சமாதானமும் பெற, உங்களை அன்புடன் அழைக்கிறோம். நல்ல தீர்மானம் எடுங்கள். அதில் உங்கள் மறுமை அடங்கியுள்ளது. ஆம், வாய்மை வென்றது. இயேசு வெற்றி சிறந்தவர். உங்களுக்கு வெற்றி வாழ்க்கைத் தருகின்றவர் மேலும் விவரம் அறிய அருகிலுள்ள கிறிஸ்துவின் சபையை அணுகுங்கள்.

ப. பால்ராஜ்

# "வாய்மையே வெல்லும்"

வெற்றியை விரும்பாதவர் எவரும் இல்லை. விரைந்து முன்னேறவும் வெற்றி பெறவும் தவறான உத்திகள் கையாளப் படுகின்றன

சமூக நியாய நெறிகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. நீதி, நேர்மை, ஆன்மீகம், மறுமை பற்றி பேசுபவர்களை "பிழைக்கத் தெரியாதவர்கள்" அல்லது "ஏமாளிகள்" என சமூகம் எள்ளி நகையாடுகிறது. அநீதியும் அசத்தியமும் வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. உலகியலுக்கு அதிக வரவேற்பு கிடைக்கும் போது நீதி, நியாயங்கள் தள்ளாடுகின்றன.

கலையும் மேகம் சூரியனை நிலையாக மறைக்க முடியாதது போல, சுயநலம், சூழ்ச்சி, சந்தர்ப்பவாதம், வெளிவேடம் போன்ற இழிச்செயல்கள் சீர்கெட்ட சமூதாயத்தில் வறவேற்பு பெற்றாலும் வாய்மையின் வெற்றியை அவைகள் தடுக்க முடியாது.

நமது அரசு இலட்சனையில் "வாய்மை வெல்லும்" என ஒரு வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது ஆர்வத்தோடு கவனிக்கத்தக்கது. வாய்மை என்பது "சத்தியம்" அல்லது "உண்மை" யைக் குறிக்கும். சத்தியம் என்பது இறைவனைக் குறிக்கிறது, சத்தியம் என்பது நாம் அவருக்கு கொடுக்கும் இன்னொரு பெயர் என அறிஞர். இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். தேவனே சத்தியபரர் என்றும் எந்த மனிதனும் பொய்யன் என்றும் சொல்வோமாக என விவிலியம் கூறுகிறது (ரோ. 3:4).

சத்தியபரராகிய தேவன் மனிதனை செம்மையானவனாக உண்டாக்கினார். அவர்களோ அநேக உபாய தந்திரங்களை தேடிக் கொண்டார்கள் (பிர. 7:29).

நீதிமான் ஒருவனும் இல்லை, தேவனை தேடுகிறவன் இல்லை எல்லோரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டு போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை. ஒருவனாகிலும் இல்லை. (ரோ. 3:10-12) நாம் எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்து விட்டோம் (ரோ. 3:23) நமது சுய நீதி தேவனுடைய பார்வையில் அழுக்கான கந்தையைப் போல் இருக்கிறது (ஏசா. 64:6). தேசம் தன் குடிகளால் தீட்டுப்பட்டது. அவர்கள் தேவனுடைய பிரமாணத்தை மீறி, கட்டளையை மாறுபாடாக்கி, நித்திய உடன்படிக்கையை முறித்தார்கள். இதனிமித்தம் சாபம் தேசத்தை பட்சித்தது. (ஏசா. 24:5-6) மனிதருடைய பாவத்தால் உலகம் ஒருமுறை சபிக்கப்பட்டும் கி.மு 2400 வாக்கில் பெருவெள்ளத்தால் அழிக்கப்பட்டும் இருக்கிறது. (ஆதி. 3:17, 6:12-7:25).

மேற்சொன்ன திருவசனங்களின் படியும் நடைமுறையிலும் மனிதனிடத்திலும் அவன் வாழும் உலகிலும் வாய்மையும் தேவபயமும் இல்லை என்பதையும் மாறாக துயரமும் சாபமும் இருக்கிறதென்பதையும் அறிகிறோம்,

அப்படியானால் வாய்மை அல்லது சத்தியம் எங்கே, எவரிடம் இருக்கிறது?

இயேசு "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன். என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவா. 14:6) உம்முடைய சத்தியத்தினாலே "அவர்களை பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம்" (யோவா. 17:17-

இயேசு இந்த சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க உலகில் வந்தார் (யோவா. 18:37)

இயேசுவே வாய்மையாக இருக்கிறார். அவருடைய திரு-வசனங்களும் சத்தியமாக இருக்கின்றன. மனிதனிடத்திலும் அவன் தத்துவங்களிலும் பொய்மையும் பேதமையும் காணப்படுகிறது.

அசத்தியம் மனிதனுக்கு துயரத்தையும், அழிவையும் கொண்டு வருகிறது. சத்தியம் விடுதலை, தூய்மை மற்றும் வெற்றியை கொடுக்கிறது.

## சத்தியபரராகிய இயேசு கிறிஸ்து விடுதலையளிக்கின்றார்

''பாவம் செய்கின்ற எவனும் பாவத்திற்கு அடிமையாய் இருக்கின்றான்'' (யோ. 8:34). பாவம் செய்கிற எவனும் பிசா-சினால் உண்டாயிருக்கிறான். அவன் கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவ குமாரன் வெளிப்பட்டார் (1யோ 3:8). மாம்சத்தின் கிரி-யைகளான விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்ரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுக்கள் போன்ற பாவச்செயல்களுக்கு மனிதர் அடிமைப் பட்டுள்ளனர். )கலா 5,19-21. கொரி. 6:9-10).

இவற்றினின்றும் அதற்கான தண்டனையினின்றும் மனிதனை விடுவிப்பவர் யார்?

அரசு சட்டத்தால் இவர்களை சீர்திருத்தவோ அல்லது விடு-விக்கவோ முடியவில்லை. பூரண மதுவிலக்கு கொள்கை இதுவரை வெற்றி பெறாதது கவனிக்கத்தக்கது. சமய சன் மார்க்க நடவடிக்கை களிலும் பாவ விடுதலை இல்லை. ''நாற்பது நாள்'' சமய ஈடு-பாட்டிற்கு பின் சம்பந்தப்பட்டவர்கள் மீண்டும் தவறு செய்வதை காண்கிறோம்.

மருத்துவம் உளவியல் சிகிச்சையும் பாவத்திற்கு விடுதலை-யளிக்கவில்லை. இதற்கு மருத்துவரும் விதிவிலக்கல்ல.

சுயகட்டுப்பாட்டாலும் மனிதன் சீர்திருந்தவோ பாவச்-செயல்களிலிருந்து விடுபடவோ முடியவில்லை பாவத்தின் பயங்கரத்-தை பாருங்கள்!

நிம்மதி தரும் என எதிர்பார்த்து மனிதன் செய்யும் பாவச்-செயல்கள் நிம்மதிக்கு பதிலாக துயரத்தையே கொடுக்கின்றன.

இவைகளுக்கு அடிமைப்பட்டுள்ளோர்கள் ''ஐயோ நான் என் குடியை, புகையை, ஒழுங்கீனத்தை விட்டுவிட தான் விரும்புகிறேன்; நான் அடைந்த அவமானமும் இழப்பும் போதும்! நானும் கோயி-லுக்கு போனேன் மொட்டை போட்டேன்! மருத்துவ சிகிச்சையும் பெற்றேன்! ஜோதிடம் பார்த்து தாயத்தும் கட்டினேன்! சாமியா ரிடம் பாவ சங்கீர்த்தனமும் செய்தேன்! இவை யெல்லாம் செய்தும் என்னால் திருந்த முடியவில்லையே! ஐயோ! எனக்கு விடுதலை இல்லையே என புலம்பி தவிக்கின்றனர்.

பாவத்தின் விளைவாக குற்ற உணர்வு' பயம், மரணம் தேவகோபம் மனிதனை நிழலைபோல பின் தொடருகிறது.

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும், ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் உண்மையாகவே விடுதலையாவீர்கள் என்றார். இயேசு கிறிஸ்து (யோவான். 8:32, 36) இப்படிப்பட்டவர்களை விடுவித்து, வாழ்வளிக்கிறவர் இயேசு கிறிஸ்து ஒருவரே. இயேசுவாலன்றி வேறு ஒருவராலும் இரட்சிப்பில்லை நாம் இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை (அப்4:12)

## சத்தியபரராகிய இயேசு மனிதனை பரிசுத்தமாக்குகிறார்

பாவத்தால் ஆத்துமாவும் மனசாட்சியும் கறைப்பட்டு போகிறது. (ஏசா.17:9) ''துணி வெளுக்க நீர்உண்டு., மனம் வெளுக்க யாருண்டு'' என ஒரு தத்துவவாதி வினவினார். ஆம், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது (1யோ 1:7). ஆவியினாலே சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து உங்கள் ஆத்துமாக்களை சுத்தமாக்கி கொண்டீர்கள் (1 பேது 1:22). இயேசு சுத்த இருதயத்தையும் பாவத்திற்கு எதிராய் போராடுவதற்கான ஆற்றலையும் கொடுக்கிறார்.

## கர்த்தராகிய இயேசு வெற்றி சிறந்தவர்

''வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தைகள் ஒழிந்து போவதில்லை'' என்றார் இயேசு கிறிஸ்து (மத் 24:35. யோவ. 12:48) வேத வார்த்தைகள் மிக துல்லியமாக நிறைவேறி வருகின்றன. தற்கால உலக நிகழ்ச்சிகள் அதற்கு சான்றளிக்கின்றன.

முன் எப்போதும் இருந்திராத அளவு சுயநலம், வன்முறை, போர் அபாயங்கள், பாவ வேட்க்கை, ஒழுக்க வீழ்ச்சி, சமயச் சுரண்டல்கள், இயற்கை சீற்றங்கள் இன்று காணப்படுகின்றன.

இயேசு சிலுவையில் மரித்தபோது சத்தியம் அல்லது தேவனுடைய திட்டம் தோற்றுப்போகும் என பிசாசும் அவன் மக்களும் எண்ணியிருப்பர். ஆனால், இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்ததின் மூலம் சாவையும் பிசாசையும் வென்றார். (மத்.28:1-6, மாற் 16:6, எபி 2:14-15).

இவர் உலகத்தையும் பிசாசின் சோதனைகளையும் வென்றார். ரோம ஆளுநர் பிலாத்து அவரை விசாரித்து விட்டு இவர் நீதிபரர் என தீர்ப்பளித்தான் (மக் 27: 19-24) ''உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்'' என்றார் இயேசு கிறிஸ்து (யோ. வா 16:33)

வெற்றிவேந்தர் இயேசு மீண்டும் நியாயதிபதியாய் வர இருக்கிறார். (அப் 1:9-11, 17:30-31) யோவா 14:1-2). அவர் உங்களை நேசிக்கிறார். அவர் உங்கள் பாவங்களுக்காகமரித்து

(26-ம் பக்கம் பார்க்கவும்)

அவன் அருளிய சொல்லி முடியாத ஈவுகளுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் (II கொரி 15:9)

1991ம் ஆண்டில் நம்முடைய வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்கள், வேதனைகள், சோதனைகள், வியாதிகள், நாட்டில் ஏற்பட்ட நாச காரியங்கள், இயற்கைச் சீற்றங்கள் ஆகியவைகளால் நாம் சேதமடையாமலும், இறந்து போகாமலும் நம்மைக் காத்துக் கொண்டதோடு நில்லாமல், நமக்குப் பல்வேறு ஆசீர்வாதங்களை நல்கி நம்மை வழி நடத்திக் கொண்டு வந்து இவ்வாண்டின் விளிம்பிலே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

எஞ்சியிருக்கும் ஒரு சில நாட்களையும் நாம் கடந்து ஒரு குதூகலமான புத்தாண்டைக் 'காணச் செய்வார் என்ற விசுவாசத்தோடு பயணத்தைத் தொடர்வோமாக!

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

PRINTEDMATTER BOOK-POST

TO

If undelivered please return to:

The Editor

THIRUMARAI AASAAN

Post Box No: 58 ERODE-638 001.